# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,410 — 1958 ජූලි 4 වැනි සිකුරාදා — 4.7.1958**

**11,410 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

### தபால் கட்டணத்துக்கும் இறைவரிக்குமான முத்திரைகள் மொழி மாற்றங்கள்

பின்வரும் விலைமதிப்புள்ள முத்திரைகள் கீழேதரப்பட்டுள்ள மொழி மாற்றங்களுடன் 1958 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15 ந் திகதி தொடக்கம் விற்பனைக்கு வழங்கப்படும் என இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது :—

35 சதம்—நட்சத்திரமலர்

50 சதம்—படகு

2. (அ) முத்திரைகளில் "Postage and Revenue" என ஆங்கிலத்தில் உள்ள பதங்கள் "තැපැල් ගාස්තු හා ආදායම" சிங்களத்தில் இருக்கும்.

(ஆ) 35 சத முத்திரைப் படத்தின் பெயர் சிங்களத்தில் இருக்கும் 50 சத முத்திரையில் படப் பெயர் இல்லை.

(இ) விலைமதிப்புகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இருக்கும்.

(ஈ) "ශ්‍රී ලංකා" என்ற பதம் பெரிய எழுத்துக்களில் துலக்கமாகத் தோன்றும். இரண்டாவதாக இலங்கை என்பதும் மூன்றுவதாக "Ceylon" என்பதும் இடம்பெறும்.

3. இம்முத்திரைகளின் நிறம், அளவு, கரை அமைப்பு முதலியவற்றில் மாற்றம் இருக்காது. மேலே குறிப்பிட்ட விலைகளுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் முத்திரைகள் கையிருப்பிலிருந்து முடியும் வரை தொடர்ந்து விற்பனை செய்யப்படும்.

ஸ்ரான்லி டி சொயிசா,
நிதி மந்திரி.

1958 ம் ஞு ஆனி மீ 25 ந் உ.

### நாளுவித அறிவித்தல்

#### இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

**புகையிரதக் கடவை திருத்தங்கள்**

கடலோரப் புகையிரதப் பாதையில், அகங்கம புகையிரத ஸ்தானத்துக்கும் வெலிகம புகையிரத ஸ்தானத்துக்கும் இடையிலும், காலி–மாத்தறை பெரிய தெருவில் இருக்கும் (89 மைல் 12 சங்கிலி 78 லிங்ஸ்) புகையிரதக் கடவை திருத்துவதற்காக, கீழே குறிக்கப்படும் திகதிகளில் (5.7.58, 6.7.58) வாகனப் போக்குவரத்துக்கு மூடப்படும்.

5.7.58—மாலை 6 மணிதொடக்கம் 10 மணிவரை ஒரு பகுதியும் ;

6.7.58—மாலை 10 மணிதொடக்கம் காலை 4 மணி வரைமுழுவதும் ;

6.7.58—காலை 4 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை ஓர்பகுதியும் மூடப்படும்.

மேற்படி ஒரு பகுதி மூடப்பட்டிருக்கும் காலத்தில் வாகனப் போக்குவரத்துக்கு உதவி செய்யப்படும்.

மேற்படி முழுவதும் மூடப்பட்டிருக்கும் காலத்தில் இவ்வழியால் செல்லவரும் எவ்வித வாகனங்களும் கப்பறரோற்ற வீதியாலும், காலி—அக்குறசை—மாத்தறை வீதியாலும் செல்லவேண்டும்.

ந. அ. வைத்திலிங்கம்,
புகையிரதப் பகுதி
பிரதம தலைவருக்காக.

தபால் பெட்டி இலக்கம் 355,
கொழும்பு,
1958 ம் ஞு ஜூன் மீ 28 ந் உ.

**1958 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **" நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிரீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1958 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன் பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | | |
|---|---|---|---|---|
| ஒரு வருட சாந்தா .. .. | 15 | 0 | .. | ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. | ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | | |
| | 0 | 31 | .. | தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | | |
| | 0 | 14 | .. | தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.